IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 44/2019

Deposition of witness for prosecution : PW2

Defense :

Name : முபாரக்

Father's Name : அன்வர்

Village :

Taluk : ஆரணி

Caste :

Calling : மீன் வியாபாரம்

Religion :

Age : 43

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.11.2025.

**முதல் விசாரணை**

**1, 2, 3 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி இறப்பு.**

1. நான் தற்போது ஆரணியில் வசித்து வருகிறேன். அ.சா.1 ரகமதுல்லாவை தெரியாது. பட்டியல் சாட்சி 2 முகமது உசேன் என்பவரை தெரியாது. பட்டியல் சாட்சி கணேசன் என்பவரை தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அதனை தொடர்ந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

1. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்த போது ஆரணி, வேம்புலியம்மன் கோயில் அருகே இருந்த போது இரவு 08.00 மணிக்கு கடை வைத்துள்ள ரகமத்துல்லா என்பவரை ஆரணி பள்ளிக்கூட தெருவை சேர்ந்த சங்கர் என்கிற கோபால், பிராகாஷ்ராஜ், தினேஷ், திருமுருகன், லோகேஷ், சூர்யா மற்றும் பூவரசன் ஆகியோர் கத்தியால் கிழித்து கையால் அடித்து கொண்டு இருந்தார்கள் என்றும் கல்லை எடுத்து அடித்து கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார்கள் என்றும் காயம் பெற்ற ரகமத்துல்லாவை முகமது உசேன் என்பவருடன் ஆரணி அரசு மருத்தவமனைக்கு அழைத்து சென்று இன்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.